1973 நவம்பர் 28]

சூரியப்பட்டி அருகே அணை.

*460. வினா.—திரு. வீ. செல்லதுரை: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், கணவாய்புதூர் ஊராட்சிப் பகுதி 'சூரியப்பட்டி' கோம்பையின் பெரும் பள்ளத்தில் அணை ஒன்று கட்டுவதற்கு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இரண்டு மாற்றுத் திட்டங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பின்னர் கைவிடப்பட்டு விட்டன.

திரு. வீ. செல்லதுரை: அது மிகவும் வரண்ட பகுதி. அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது என கனம் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்தத் திட்டத்தை மீண்டும் அமுலாக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் ஏராளமான காட்டு இலாகாவிற்குச் சொந்தமான நிலங்கள் நீரில் மூழ்கும், அதனால் ஏராளமான சந்தன மரங்கள் பாதிக்கப்படும் என்று வன இலாகாவைச் சார்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர். ஆகவே, தற்பொழுது இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

சாத்தனூர் நீர்த் தேக்கத்திலிருந்து நீர் வழங்கல்

*461 வினா.—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணனன் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் நீர்த் தேக்கத்திலிருந்து கால்வாய் வெட்டி அதன் மூலம் ஏரிகளுக்குத் தண்ணீர் விடும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மற்றும் (இ): சாத்தனூர் அணையிலிருந்து வாய்கால் வெட்டி செங்கம், திருவண்ணாமலை தாலுக்காக்களில் உள்ள ஏரிகளுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஒன்று முன்னோடி ஆய்வில் உள்ளது.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : இந்தத் திட்டத்தை ஏறக்குறைய 4, 5 ஆண்டுகளாகவே பொது மக்கள் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டுதோறும் பம்புசெட்டுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் கிணறுகளை வெட்டுவதற்கு விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். இந்தத் திட்டத்தை விரைவிலே அமுல் நடத்தினால் விவசாயிகளுக்கு மிகவும் நன்மையாக இருக்கும். அடுத்த ஆண்டிலாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சாத்தனூர் அணைக் கட்டிற்கு மேற்புறத்தில் வலது பக்கம் கால்வாய் வெட்டுவதற்கு ரூ. 202 லட்சம் அளவில் ஒரு திட்டத்தை அரசு ஏற்றுக்கொண்டு சமீபத்தில் அறிவித்திருக்கிறது. இந்தத் திட்டம் சீக்கிரம் நிறைவேற்றப்படும்.

துரிஞ்சலாற்றின் குறுக்கே அணை

*462 வினா திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டம், வெறையூர் கிராமத்தின் அருகில் உள்ள துரிஞ்சலாற்றில் அணைகட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) விரையூர் கிராமத்தின் அருகே துரிஞ்சலாற்றின் குறுக்கே ஒரு வெள்ளத் தடுக்கி அமைத்தல் முன்னோடி ஆய்வில் உள்ளது.

திரு. எம். எஸ். இராதகிருட்டிணன்: தலைவர் அவர்களே, அந்த ஆற்றில் அதிகமாகத் தண்ணீர் வீணாகிக் கொண்டிருக்கிற காரணத்தினால் அங்கே விரைவிலே அதைக் கட்டி முடித்தால், 20 கிராமங்களுக்கு ஏரிகளில் சென்று பாயக்கூடிய வசதி இருக்கிறது. எனவே, அடுத்த ஆண்டில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தத் திட்டத்திற்கு ஏறக்குறைய ரூ. 30.60 லட்சம் செலவாகும் என்று திட்டமிடப்